A

Kanchipuram DT

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | | |

நேரம்: 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 90

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 14×1=14

I. பலவுள் தெரிக:

1. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க:
   அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
   இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்
2. பிழையான தொடரைக் கண்டறிக:
   அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.
   ஆ) ஏதிலிக் குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.
   இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.
   ஈ) யானைகளால் வெகுதொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறிய முடியும்.
3. கூற்று - "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
   விளக்கம் - கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு
   அ) கூற்று சரி, விளக்கம் தவறு. ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
   இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு
4. நிழல்போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?
   அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு
5. "கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
   காலத்தால் சாகாத தொல்கனிமங்கள்" - அடிமோனையைத் தெரிவு செய்க.
   அ) கபாட புரங்களை - காவு கொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
   இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத
6. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
   அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
   இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
7. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது
   அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்
8. திருக்குறளில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
   அ) 9 ஆ) 7 இ) 3 ஈ) 5

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



9. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தணிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்
அ) மூதூர் ஆ) வெற்றிடம் இ) நல்லாடை ஈ) பைந்தளிர்
10. 'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்' - யார் யாரிடம் கூறியது
அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்
11. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? - இது எவர் மொழி
அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராஜன் ஈ) புல்
12. சொல்ல சொல்ல - இலக்கணக்குறிப்பு தருக.
அ) பண்புத்தொகை ஆ) அடுக்குத்தொடர்
இ) இரட்டைக்கிளவி ஈ) உரிச்சொற்றொடர்
13. மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை
அ) சிவகாமியின் சரிதம் ஆ) பாஞ்சாலியின் சபதம்
இ) புரட்சிக் காப்பியம் ஈ) பாண்டியன் பரிசு
14. நர்த்தகி நடராஜ் யாரிடம் பரதம் கற்றார்.
அ) பத்மா சுப்ரமணியம் ஆ) வழுவூர் இராமையா
இ) எம்.எஸ்.சுப்புலெட்சுமி ஈ) தஞ்சை கிட்டப்பா

## பகுதி - II

### *பிரிவு - 1*

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** 3×2=6

15. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
16. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
17. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்த நல்
தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்" - இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?
18. "கற்றேன் என்பாய் கற்றாயா?" என்று அப்துல்ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

### *பிரிவு - 2*

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2×2=4

19. தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறுகுறிப்பு வரைக.
20. இந்தியக் கட்டக் கலையின் மூன்று வரிகள் யாவை?
21. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### *பிரிவு - 3*

**இ) எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** 7×2=14

22. கலைச்சொல்லாக்கம் பொருள் தருக?
23. *ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக:*
அ) கொடுஞ்சோறு ஆ) பயமில்லை
24. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக :*
காலத்துக்கேத்த மாரி புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்.
25. *பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக :* வலி, வளி, வழி
26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க: வைகை
27. *பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக:*
1. Culture 2. Fine Arts

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



28. *விடைக்கேற்ற வினாவை எழுதுக:*
வழக்கறிஞராகத் தொழில்புரிவதை விடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி விரும்பினார்.

29. *தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக :*
நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.

30. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:*
கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை தீமைகளை புரிந்து பேசுவர்.

## பகுதி - IV

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

31. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' - என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.
32. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.
33. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?
34. "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

35. தாமனாகம் என்றால் என்ன?
36. இவாவின் பேச்சுநடை குறித்து சுந்தரராமசாமி கூறுவன யாவை?
37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதை பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.
38. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.

## பகுதி - V

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3×4=12

39. வேற்றுமை அணி (அல்லது) உவமையணியை விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம் தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம் தரும் பெருமையும் பணம் தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம் தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால் நான்
நிதம் தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

- நாமக்கல் கவிஞர்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



41. போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து - பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

42. *புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக:*

(மதி, இதழ், கம்பு, வளை, சினை, ஆழி)

1. எலியும், நுழையும்; எழிலரசி கையும் நுழையும் ..................
2. அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ................
3. அறிவின் பெயரும் அது தான் ; அம்புலியின் பெயரும் அதுவே தான் ...............
4. பூவின் உறுப்பும் நானே ; புன்னகையின் பிறப்பிடமும் நானே ................

43. *தமிழாக்கம் தருக :*

1. Education is the most powerful weapon, which you can use to change the world.
2. Looking at beauty in the world is the First step of Purifying the mind.
3. Culture does not make people, people make culture.
4. A nation's culture resides in the hearts and in the soul of its people.

## பகுதி - VI

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 3×6=18

44. பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி" என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

(அல்லது)

"அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

45. பௌத்தக் கல்வி, சமணக்கல்வி, மரபு வழிக்கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

(அல்லது)

'கல்லும் கதை சொல்லும்' -என்னும் தொடர் தஞ்சை பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.

## பகுதி - VII

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக:** 4+2=6

47. அ) "அம்ம வாழி தோழி" .......... எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

(அல்லது)

ஆ) "நன்று" என முடியும் குறள்"

-------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com